

# நாடாளுமன்றத் தேர்தல் – 2024 : தமிழ்நாடு முழுவதும்

## கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர்,

கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார பயண விவரம் வருமாறு :-

| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| **25.03.2024 (திங்கட்கிழமை)** | **கன்னியாகுமரி, திருநெல்வேலி** |
| **26.03.2024 (செவ்வாய்க்கிழமை)** | **தூத்துக்குடி இராமநாதபுரம்** |
| **27.03.2024 (புதன் கிழமை)** | **தென்காசி விருதுநகர்** |
| **29.03.2024 (வெள்ளிக்கிழமை)** | **தருமபுரி, கிருஷ்ணகிரி** |
| **30.03.2024 (சனிக்கிழமை)** | **சேலம், கள்ளக்குறிச்சி** |
| **31.03.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | **ஈரோடு நாமக்கல் கரூர்** |
| **02.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **வேலூர், அரக்கோணம்** |
| **03.04.2024 (புதன்கிழமை)** | **திருவண்ணாமலை ஆரணி** |
| **05.04.2024 (வெள்ளிக்கிழமை)** | **கடலூர், விழுப்புரம்** |
| **06.04.2024 (சனிக்கிழமை)** | **சிதம்பரம், மயிலாடுதுறை** |
| **07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | **புதுச்சேரி** |
| **09.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **மதுரை, சிவகங்கை** |
| **10.04.2024 (புதன்கிழமை)** | **தேனி, திண்டுக்கல்** |
| **12.04.2024 (வெள்ளிக்கிழமை)** | **திருப்பூர், நீலகிரி** |
| **13.04.2024 (சனிக்கிழமை)** | **கோவை, பொள்ளாச்சி** |
| **15.04.2024 (திங்கட்கிழமை)** | **திருவள்ளூர் வடசென்னை** |
| **16.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **காஞ்சிபுரம், திருப்பெரும்புதூர்** |
| **17.04.2024 (புதன்கிழமை)** | **தென்சென்னை, மத்திய சென்னை** |

குறிப்பு : முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை : செஞ்சி சட்டமன்றத் தொகுதி

# இந்தியா கூட்டணி செயல் வீரர்கள் கூட்டம்!

### வேட்பாளர் தரணி வேந்தனை அறிமுகம் செய்து வைத்து அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

செஞ்சி, மார்ச் 24 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஆரணி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட செஞ்சிசட்டமன்ற தொகுதி இந்தியா கூட்டணி சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் செஞ்சி ஒன்றியம் செம்மேடு ஊராட்சி வெற்றி வேலன் நகரில் 27.3. 2024 புதன்கிழமை காலை 10.00மணிக்கு நடைபெறுகிறது கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்குகிறார். கூட்டத்தில் பொதுப் பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆரணி நாடாளுமன்றத் தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக கழக வேட்பாளர் தரணி வேந்தனை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

இதில் தி.மு.க. தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர்அன்பழகன், செஞ்சி தொகுதி பொறுப்பாளரும் தலைமை பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாநில விவசாய அணி இணை செயலாளர் செந்தமிழ் செல்வன், மாநில காங்கிரஸ் கட்சியின் துணை தலைவர் ரங்க பூபதி, மதிமுக மாநில துணை பொது செயலாளர் ஏ. கே. மணி, விழுப்புரம் மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் ஆர். பி. ரமேஷ், சி.பி.எம். கட்சியின் விழுப்புரம் மாவட்ட செயலாளர் ராமமூர்த்தி, சி.பி.ஐ .கட்சியின் விழுப்புரம் மாவட்ட செயலாளர் சரவணன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வடக்கு மாவட்ட செயலாளர் தனஞ்செழியன், ஆரணி நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் நன்மாறன்,விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் துரை சங்கர் ,மாவட்ட அமைப்பாளர் செஞ்சி அரசு ,இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் கௌரவ தலைவர் சையத் மஸ்ஜித் பாபு, மதிமுக மாவட்ட செயலாளர் பாபு கோவிந்தராஜ் ,தாமுமுக மாநில செயலாளர் முஸ்தாக்கின்,மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர்சையத் உஸ்மான்,தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாவட்டச் செயலாளர் கோபாலன், மக்கள் நீதி மையக் கட்சியின் வடக்கு மண்டல பொறுப்பாளர் ஸ்ரீபதி,கம்யூனிஸ்ட் கட்சியின் வட்ட செயலாளர் கலியமூர்த்தி இன்ப ஒலி ராஜேந்திரன் சுப்ரமணி குமார் திமுக பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ் ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன் நாராயண மூர்த்தி சாந்தி சுப்பிர மணியன் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் , அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத் முன்னாள் செஞ்சிநகர செயலாளர் காஜா நசீர்,மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணிநெடுஞ்செழியன், அனந்தபுரம்நகர மன்ற தலைவர் முருகன், ஒன்றிய துணைசேர்மன் கள்ஜெயபாலன், மேல்மலையனூர் விஜயலட்சுமி முருகன் , மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன், செல்வி ராமசரவணன், செஞ்சி பேரூராட்சி மன்ற துணை தலைவர் ராஜலட்சுமி செயல் மணி, அனந்தபுரம் பேரூராட்சி மன்ற துணை தலைவர் அமுதா கல்யாண் குமார் ,மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மருத்துவ அணி அமைப்பாளர் சக்தி பிரியன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் தமிழரசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா, மாவட்டம் மகளிர் அணி அமைப்பாளர் திலகவதி விஜயகுமார் உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை கழக நிர்வாகிகள் கலந்துகொள்கின்றனர்.செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் ஆகியோர்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர் .செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன் நன்றி கூறுகிறார்.



ஈரோடு தெற்கு மாவட்டத்தில் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி தலைமையில் மாவட்டக் கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் கே.இ.பிரகாஷை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஈவிகேஎஸ்.இளங்கோவன், கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

### அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை: இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதி -

# அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்!

### அமைச்சர்கள் ராஜ கண்ணப்பன் – சிவ.வீ மெய்யநாதன் மற்றும் காதர்பாட்சா (எ) முத்துராமலிங்கம் சிறப்புரை!

புதுக்கோட்டை, மார்ச் 24 -

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி சட்டமன்ற தொகுதி இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி தேர்தல் குறித்து செயல் வீரர்கள் கூட்டம் அறந்தாங்கி சந்தோஷ மகாலில் நடைபெற்றது. இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி இந்திய கூட்டணி கட்சிகளின் வேட்பாளராக நவாஸ்கனி அறிவிக்கப்பட்டுள்ளார். அதனையொட்டி தேர்தல் களத்தில் எவ்வாறு பணியாற்றுவது குறித்து செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்,

இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா (எ) முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்கள்.

அப்போது சட்டத்துறை அமைச்சர் பேசுகையில் தலைவர் அவர்களின் சிறப்பான ஆட்சியில் மக்கள் செழிப்பாக உள்ளனர். தலைவர் அவர்கள் அறிவித்துள்ள வேட்பாளருக்கு நாம் சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெறச் செய்ய வேண்டும், மத்தியில் உள்ள பாசிச ஆட்சியை தூக்கி எரிந்து மீண்டும் ஜனநாயகம் மலர பாடுபட வேண்டும், இந்திய கூட்டணி வெற்றி பெற உழைக்க வேண்டும் என்றார். தொடர்ந்து சுற்றுச்சூழல்த்துறை அமைச்சர் மெய்யநாதன் பேசுகையில் மத்தியில் ஒன்றிய அரசு மக்கள் விரோத போக்கை கடைபிடித்து வருகிறது குறிப்பாக மக்களின் வரிப்பணத்தை மக்களுக்கே செலவிடாமல்,கார்பரேட் கம்பெனிகளுக்கு செலவிடுகிறது என்றார், எனவே இன்னும் 20 நாட்கள் தான் தேர்தலுக்கு உள்ளது, அதற்குள் மக்களை சந்தித்து இந்திய கூட்டணி கட்சியின் ஏணி சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க வேண்டும் என்றார். தொடர்ந்து அமைச்சர் ராஜகண்ணப்பன் பேசுகையில் தலைவர் தளபதி தலைமையில் தமிழகத்தில் நல்லாட்சி நடைபெறுகிறது, பள்ளி மாணவர்களுக்கான காலை சிற்றூண்டி திட்டம், மகளிர் உரிமை தொகை திட்டம் போன்று மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. பா.ஜ.கவோடு அதிமுக கூட்டணி வைக்காமல் வேட்பாளர் பட்டியலை அறிவித்தது, அறிவுத்த மறுகனமே முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் ஒன்றிய அரசு அமலாக்கத் துறை வைத்து ரைடு நடத்துகிறது, திமுகவுக்கு எதிராக தமிழகத்தில் பாஜக கால்லூன்ற நினைக்கிறது அது ஒருபோதும் நடக்காது, திமுகவை யாராலும் அழிக்க முடியாது என்றார். இறுதியில் இந்தியக் கூட்டணி கட்சி வேட்பாளர் நவாஸ்கனி அதிகபடியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் இராம.சுப்புராம், சி. ராமநாதன், துரை.மாணிக்கம், ஞான.இளங்கோவன், அபுதாஹீர், க.ராஜேந்திரன், இரா.ஆனந்த், வீரய்யா, உதயம் சண்முகம், ஆர்.ஆர்.கே.கலைமணி, வே.பொன்துரை, சக்தி ராமசாமி, பொன். கணேசன், த.மணி ராஜன், எஸ்.எம்.சீனியார், மகேஸ்வரி சண்முகநாதன், உமா தேவி, தி.முத்து, பாத்திமா பீவி, ஹரி விமலாதி, இ.ஏ.பெரியகருப்பன், ஆ. கலைச்செல்வன், பழனி தேவா, இரா.தமிழ் ராசு, தீன், கழக தலைமையிலான இந்தியா கூட்டணியின் தோழமை கட்சியின் மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர வட்ட, கிளை நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழக தலைமையிலான இந்தியா கூட்டணி இராமநாதபுரம் பாராளுமன்றம், அறந்தாங்கி சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் அறந்தாங்கி சந்தோஷ் திருமண மஹாலில் சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர்பாட்சா (எ) முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ ஆகியோர் கழக கூட்டணி கட்சி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வெற்றி வேட்பாளர் கே.நவாஸ்கனியை ஆதரித்து சிறப்புரையாற்றினார்கள். உடன் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் இராம.சுப்புராம், சி.ராமநாதன், துரை.மாணிக்கம், ஞான.இளங்கோவன், அபுதாஹீர், க.ராஜேந்திரன், இரா. ஆனந்த், வீரய்யா, உதயம் சண்முகம், ஆர்.ஆர்.கே.கலைமணி, வே.பொன்துரை, சக்தி ராமசாமி, பொன்.கணேசன், எஸ்.எம்.சீனியார், திமுக தலைமையிலான இந்தியா கூட்டணியின் தோழமை கட்சியின் மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர வட்ட, கிளை நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,